

நீலகிரி மாவட்டம், கீழ்கோத்தகிரி ஒன்றிய தி.மு.க செயல்வீரர்கள் கூட்டம் தர்ம சாஸ்தா கூட்ட அரங்கில் மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ராம்குமார், சுரேஷ்குமார், ஆல்வின், LPF முருகன், ஒன்றிய நிர்வாகிகள் முருகன்,காரி, ருக்குமணி, நாகராஜ், பீட்டன், வின்சென்ட், ரவீந்திரன், ராம்கோபால் உட்பட அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் திரளாக கலந்துகொண்டனர். கூட்டம் முடிவில் மாவட்ட பிரதிநிதி ராம்கோபால் நன்றி கூறினார்.

# கீழ்கோத்தகிரி ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## கே.எம்.ராஜு எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

நீலகிரி, ஜூலை 24-

நீலகிரி மாவட்டம், கீழ்கோத்தகிரி ஒன்றிய தி.மு.க செயல்வீரர்கள் கூட்டம் தர்ம சாஸ்தா கூட்ட அரங்கில் மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய கழக செயலாளர் டி.பீமன் அவர்கள் வரவேற்று பேசினார், மாவட்ட அவைத் தலைவர் போஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், கீழ் கோத்தகிரி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிளை கழகங்களிலும் தொடர்ந்து கழக நிகழ்ச்சிகள் நடத்துவது எனவும்,

உள்ளாட்சி தேர்தலில் நூறு சதவீதம் வெற்றி பெற அயராது உழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ராம்குமார், சுரேஷ்குமார், ஆல்வின், LPF முருகன், ஒன்றிய நிர்வாகிகள் முருகன்,காரி, ருக்குமணி, நாகராஜ், பீட்டன், வின்சென்ட், ரவீந்திரன், ராம்கோபால் உட்பட அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

கூட்டம் முடிவில் மாவட்ட பிரதிநிதி ராம்கோபால் நன்றி கூறினார்.

---

### காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக ஒன்றிய அரசு அறிவிக்க

# தமிழ்நாடு முதல்வர் சட்டமன்றத்தில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றுக!

## சு.கல்யாணசுந்தரம் எம்.பி. - தமிழ்நாடு முதல்வருக்கு கோரிக்கை!



தஞ்சாவூர், ஜூலை 24-

காவிரி நீர்வரத்து இல்லாததால் டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அறிவிக்க கோரி ஒன்றிய அரசை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி சட்டமன்றத்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்ற மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாண சுந்தரம் கோரிக்கை.

மாநிலங்களவை உறுப்பினரும், கழக சட்டத்திட்ட திருத்தக் குழு தலைவருமான சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை பின்வருமாறு "நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும் வான்இன்று அமையாது ஒழுக்கு.

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க கிராமங்களில்

வசிக்கும், மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு அரசு தண்ணீர் வழங்க வேண்டும்.

காவிரி ஆறு கர்நாடக மாநிலம் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள குடகு மாவட்டத்தைச் சேர்ந்த தலைக்காவேரி என்ற இடத்தில் 4400 அடி உயரத்தில் தோன்றி, மொத்த நீளமான 800 கி.மீட்டரில் கர்நாடக மாநிலத்தில் குடகு, ஆசன், மைசூர், மாண்டியா, பெங்களூர் ஊரகம், சாமராசநகர் மாவட்டங்கள் வழியாக 320.கி.மீ நீளம் கடந்து, தமிழ்நாட்டில் தருமபுரி, சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், மயிலாடுதுறை மாவட்டங்கள் வழியாக 416கி.மீ கடந்து சென்று பூம்புகார் அருகே வங்காள விரிகுடாக்கடலில் கலக்கிறது. கர்நாடகதமிழ்நாடு எல்லையாக 64 கி.மீ பாய்கிறது.

மேற்கண்ட காவிரி ஆற்றின் கர்நாடக எல்லையில் விவசாய நிலமாக 6.80 லட்சம் ஹெக்டேர் பரப்பளவும், தமிழ்நாடு மாநிலத்தில் விவசாய நிலமாக 14.50 லட்சம் ஹெக்டேர் பரப்பளவும், நேரடி பாசனம் இல்லாமல் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் கிளை வாய்க்கால் வழியாக விவசாய நிலமாக 0.43 லட்சம் ஹெக்டேர் பரப்பளவும் பாசன வசதி பெறுகிறது. காவிரி ஆற்றின்

முக்கிய அணை கிருஷ்ண ராஜசாகர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

தமிழக காவிரி டெல்டா பாசனத்திற்காக ஆண்டுதோறும் ஜீன் 12ம் தேதி 120 அடி உயரம் கொண்ட மேட்டூர் அணையிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. தற்சமயம் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 75.14 அடியாக உள்ளது. கர்நாடகாவில் உள்ள கிருஷ்ண ராஜசாகர் அணையின் மொத்த உயரமான 124.80 அடியில் 21.07.2026 அன்று 92.90 அடி நீர் இருப்பில் உள்ளது.

மாண்பமை உச்சநீதிமன்றத்தின் 2018ம் ஆண்டு தீர்ப்பைத் தொடர்ந்து, சாதாரண நீராண்டில் (ஜீன்மே) கர்நாடகா பிலிகுண்டுலு (Biligundlu) எல்லைப் புள்ளியில் இருந்து தமிழ்நாட்டிற்கு 177.25 TMC நீரை மாத வாரியாக திறந்துவிட வேண்டும். அதில் ஜீன் மற்றும் ஜீலை மாதங்களில் 40.43 TMC நீர் திறந்துவிடப்பட வேண்டும். ஆனால் இதுவரை அந்நீர் திறக்கப்படவில்லை. தற்சமயம் காவிரி டெல்டா பகுதிகளில் மழை பெய்யாமல் ஆறு, ஏரி, ஊரணிகள், குளங்கள் மற்றும் வாய்க்கால்கள் வறண்டு போய் காணப்படுகிறது. காவிரி மேலாண்மை ஆணையம் (CWMA) அமைப்பு கர்நாடக அரசுக்கு ஜுன் மற்றும் ஜுலை மாதங்களுக்குரிய தண்ணீரை திறக்க ஆணையிட்டும் இதுவரை கர்நாடக அரசு காவிரி நீரை திறக்கவில்லை.

இதனால் குறுவை சாகுபடி தமிழ்நாட்டில் 202526ம் ஆண்டு ஜீன் 12ம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டு 2.43 லட்சம் ஹெக்டர் குறுவை சாகுபடி நடைபெற்றது. மேட்டூர் அணையிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் திறக்கப்படாததால் 202627ம் ஆண்டில், மும்முனை மின்சாரத்தின் மூலம் 1.6 லட்சம் ஹெக்டர் மட்டுமே குறுவை சாகுபடி நடைப்பெற்றுள்ளது. தற்சமயம் நீர்வரத்து இல்லாததாலும், வடகிழக்கு பருவமழை பொய்த்து போனதாலும், காவிரி டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீர் குறைந்து காணப்படுகிறது. இதனால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயமும் உள்ளது.

மேட்டூர் அணை திறக்கப்படாத காரணத்தினால் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் நீர்வரத்து இல்லாத காரணத்தினால்

வறுமையில் சிக்கி துயரத்தில் உள்ளனர். விவசாயிகள் துயரம் போக்க மத்திய அரசு உடனடியாக வறட்சி நிவாரணம் 1 ஹெக்டேருக்கு ரூ.25000/ வழங்கப்பட வேண்டும்.

காவிரி டெல்டா மாவட்டங்களான திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், அரியலூர் ஆகிய மாவட்டங்களில் 55 ஒன்றியங்களில் 2596 கிராமங்கள் உள்ளது. அதில் சிறுபாசன குளங்கள் 3534, சிறுபாசன ஏரிகள் 2695, குளம் மற்றும் ஊரணிகள் 8802 உள்ளது.

மேற்கண்ட காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள சிறுபாசனக குளம், சிறு ஏரிகள், பெரிய குளம் மற்றும் ஊரணிகள் ஆகியவற்றில் தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. இதனால் கிராமங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. கால்நடைகளுக்கும் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்படுகிறது. எனவே மேற்கண்ட சிறுபாசன குளங்கள், சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள் & ஊரணிகள் ஆகியவற்றில் தூர் வாராமல் கருவேல மரங்கள் வளர்ந்து உள்ளதாலும், நீர்வரத்து பாதைகள் அனைத்தும் தூர்ந்து போய் உள்ளதாலும் நிலத்தடி நீர் உயர்த்த ஏதுவாக மேற்கண்ட அனைத்தையும் தூர்வாரி மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தி கிராமங்களில் உள்ள பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் கால்நடைகளை காப்பற்ற உரிய நடவடிக்கை எடுக்க ஒன்றிய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும்.

மேலும் விவசாயத்தை மட்டுமே வாழ்வாதாரமாக கொண்டுள்ள டெல்டா மாவட்ட விவசாயிகளின் நீர் ஆதாரமாக இருந்த மேட்டூர் அணை நீர் பொய்துவிட்டதால் விவசாயிகள் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருசில டெல்டா விவசாயிகள் ஆழ்துளை கிணறு மூலமாக நிலத்தடி நீரை பயன்படுத்தி விவசாயம் செய்து வந்தனர். தற்போது தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரமான மின்வெட்டால் ஆழ்துளை கிணறு மூலம் கிடைக்கும் தண்ணீரையும் பயன்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் ஆழ்துளை கிணறு மூலம் நிலத்தடி நீரை எடுத்து விவசாயம் செய்ய ஏதுவாக விவசாயிகள் தங்கள் நிலங்களில் சோலார் பிளான்ட் அமைக்க 100 சதவீத மானியம் வழங்க தமிழ்நாடு அரசு முன் வந்தால்

மின் தடை காரணமாக விவசாயம் பொய்த்து போவது குறைக்கப்படும். விவசாயிகளின் வாழ்வாதாரம் தடைபடாது.

இனி வரும் காலங்களில் அண்டை மாநிலங்களிடம் தண்ணீருக்காக கையேந்துவதை தவிர்த்து நமது மாநிலத்தில் கிடைக்கும் மழைநீரை சேமிக்க ஏதுவாக மேற்கண்ட அனைத்து நீர்நிலைகளையும் தூர்வாரி அனைத்து விவசாயிகள் நலன் காத்திடவும் மற்றும் பொதுமக்கள், கால்நடைகள் மற்றும் அனைத்து ஜீவராசிகளின் உயிரை காத்திடவும் மத்திய நீர் வளத்துறை அமைச்சகத்தின் கீழ் சிறப்பு திட்டமாக ஒன்றிய அரசு சிறப்பு ஒதுக்கீடாக முதற்கட்டமாக ரூ.5000 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டி ஒன்றிய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல ஏதுவாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க சிறப்புத்தீர்மானம் நிறைவேற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை டெல்டா விவசாயிகள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாநிலங்களவை உறுப்பினரும், கழக சட்டத்திட்ட திருத்தக் குழு தலைவருமான சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

---

### த.வெ.க. ஆட்சியில் கரூர் மாவட்டத்தில்

# மணல் - கனிம வளம் தொடர் திருட்டு!

## நடவடிக்கை எடுக்காத மாவட்ட நிர்வாகம் ! பொதுமக்கள் கண்டனம்!

கரூர். ஜூலை. 24-

த.வெ.க ஆட்சியில் கரூர் மாவட்டத்தில் மணல் கனிம வளம் திருட்டு தொடர்ந்து நடைபெறுகிறது. ரீல்ஸ் எடுத்து போட்டும் நடவடிக்கை எடுக்காத மாவட்ட நிர்வாகம், காவல் துறைக்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் காவிரி மற்றும் அமராவதி ஆறுகளில் திருட்டுத்தனமாக இரவு நேரங்களில் மணல் எடுத்து விற்பனை செய்து வருகின்றனர். இரவு நேரங்களில் நூதன முறையில் மணல் திருட்டு நடைபெறுகிறது. சேகரித்த மணலை லாரியில் ஏற்றி அனுப்பி விற்பனை செய்து வருகின்றனர். ஆளும் கட்சி ஆதரவோடு இதேபோன்று கல் குவாரிகளிலும் சட்ட விரோதமாக, அளவுக்கு அதிகமாக கற்களை எடுத்து விற்பனை செய்து வருகின்றனர்.

காவிரி ஆற்றில் மணல் எடுத்த கும்பல் மணல் எடுத்துக் கொண்டிருக்கும் போதே ஆற்றில் வைத்து ரீல்ஸ் எடுத்து வெளியிட்டனர். எனினும் யாரையும் பிடிக்கவில்லை. மாறாக என்ன நடைபெற்றது என்றால், மாவட்ட நிர்வாகம் சார்பிலும், காவல்துறை சார்பிலும், நடவடிக்கை எடுத்து வருவதாக பத்திரிகைகளுக்கு செய்தி மட்டும் கொடுக்கப்படுகிறது. தவிர எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை.

இது குறித்து கம்யூனிஸ்டு கட்சிகள், காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கம், சுற்றுச்சூழல் இயக்கங்கள் சார்பில் தொடர்ந்து கலெக்டரிடம் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் சில போன் நம்பர்களை கொடுத்து மணல் திருட்டு குறித்து புகார் கூறுங்கள் என கூறும் அதிகாரிகள், நேரில் ஆதாரத்துடன், முகவரி மற்றும் செல்போன் எண்களுடன்அளிக்கப்படும் புகார் மனுக்களுக்கு எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வேதனை தெரிவித்தனர்.

கரூர் மாவட்டத்தில் அனுமதி இன்றி மணல் எடுப்பது குறித்தும் கல்குவாரியில் அனுமதி இன்றி ஜல்லிக்கற்கள் விற்பனை செய்து குறித்தும் ஆதாரத்துடன் பலமுறை கலெக்டர் அலுவலகத்தில் மணல் கொடுத்திருக்கிறோம் எனினும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இது குறித்து பத்திரிகை, மீடியாக்களில் பேட்டியும் அளித்து வருகிறோம். ஆனாலும் மணல் கனிம வள கொள்ளை தொடர்கிறது என சுற்றுச்சூழல் ஆதரவாளர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

---

# திருவெறும்பூர் தொகுதி - கழக நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேண்டுகோள்!



திருச்சி, ஜூலை 24-

திருச்சி தெற்கு மாவட்டத்தில் திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் குறித்து முன்னாள் அமைச்சர் - மாவட்ட செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை வருமாறு :-

திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள திருவெறும்பூர் தொகுதியில் உள்ள பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளை சந்தித்து கழக ஆக்க பணிகள் குறித்து கலந்தாலோசனை கூட்டம் கீழ்க் கண்ட தேதிகளில் கீழ்க் கண்ட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் நடைபெறுகின்றது.

24-07-2026 வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணி - பொன்மலை பகுதி - 7 வார்டுகள், இரவு 07.00 மணி - திருவெறும்பூர் பகுதி - 8 வட்டங்கள்.

25-07-2026 சனிக்கிழமை காலை 08.00 மணி - திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் - 9 ஊராட்சிகள், மாலை 05.00 மணி - துவாக்குடி நகராட்சி - 27வார்டுகள், இரவு 07.00 மணி - கூத்தைப்பார் பேரூராட்சி - 18வார்டுகள் .

26-07-2026 ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணி - திருவெறும்பூர்வடக்கு ஒன்றியம் -11 ஊராட்சிகள், மாலை05.00மணி-காட்டூர்பகுதி - 8 வட்டங்கள், இரவு 07.00 மணி -அரியமங்கலம் பகுதி - 3 வார்டுகள், இரவு 08.00 மணி - பாலக்கரை பகுதி - 4 பூத்துகள்.

இக்கூட்டத்தில் பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வட்ட, வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள், மற்றும் BLA-2 அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

### த.வெ.க. அரசு - கர்நாடக மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி

# மேகதாதுவில் அணைக்கட்டும் முடிவை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவும்!

## தஞ்சை வடக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் ! சாக்கோட்டை க. அன்பழகன் சிறப்புரை!

தஞ்சை, ஜூலை 24-

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

தஞ்சை வடக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிப்பது, நீட் தேர்வு ரத்து செய்வது, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினரை கைது செய்த த.வெ.க அரசை கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செ.இராமலிங்கம், கோவி. செழியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரெங்கசாமி, மாவட்ட கழக பொருளாளர் நடராஜன் ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் கூட்டத்தில் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாநகர ஒன்றிய பகுதி மற்றும் தேர்வு செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆகஸ்ட் 7 2026 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்டம் முழுமைக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலை உள்ள பகுதிகளில் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், திருவுருவச்சிலை இல்லாத பகுதிகளில் அலங்கரிக்கப்பட்ட கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திடவும், கலைஞர் அவர்களின் உரை மற்றும் பாடல்களை ஒலி பரப்பவும் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறோம்.

தி.மு.கழகத் தலைவர் மு.க .ஸ்டாலின் அவர்கள் நீட் (NEET) தேர்வுக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார். கிராமப்புற மற்றும் ஏழை மாணவர்களின் நலன்களைப் பாதிக்கக்கூடியது என்றும், மாநில உரிமைகளுக்கு எதிரானது என்றும் கூறி, நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி சட்டப்பேரவையில் தீர்மானங்கள் மற்றும் மாநில அளவிலான ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறார். நீட் தேர்வு முறைகேடுகள் மற்றும் தேர்வின் மீதான அச்சத்தால் ஏற்படும் மாணவர்களின் உயிரிழப்புகளுக்குப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சரை பதவி விலகுமாறு நாடு முழுவதும் தற்போது புது டெல்லியில் காக்ரோச் ஜனதா பார்ட்டி (CJP), பல்வேறு தரப்பினர் மற்றும் மாணவர் அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்திப் போராடி வருகின்றனர். தமிழ்நாட்டில் இதுவரை நீட் தேர்வு தொடர்பாக அச்சத்தில் மாணவி அனிதா உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் தன் உயிர்நீத்துள்ளனர். நீட் என்கிற கொடிய அரக்கனை அகற்றி, நீட் முறைகேடுகளில் ஈடுபட்ட நபர்களை கைது செய்து, நீட் தொடர்பான அனைத்து பிரச்சினைகளுக்கும் பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் உடனே பதவி விலக வேண்டும் என்றும், மக்கள் விரோத ஒன்றிய பா.ஜ.க அரசையும் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் அவர்களை த.வெ.க முதல்வரை விமர்சித்ததாக கூறி கண்மூடி தனமான சட்ட பிரிவுகளில் கைது செய்து சிறையிலடைத்ததை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

தமிழ்நாட்டில் ஆட்சி அமைத்திருக்கும் ஷோபா மாடல் மைனாரிட்டி அரசு மேகதாது பிரச்சினையை கண்டுக் கொள்ளாமலும், தற்போது டெல்டா மாவட்டங்களில் விவசாயத்திற்கு மட்டுமல்லாது பொதுமக்களின் குடிநீர் ஆதாரத்தையும் இழக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. கர்நாடாக மாநிலத்தில் த.வெ.க அரசின் கூட்டாளி காங்கிரஸ் கட்சி தான் ஆட்சி செய்து வருகிறது. எனவே முதல்வர் மற்றும் மாணவி கூட்டணியில் உள்ள கட்சியினரும் கர்நாடக மாநில காங்கிரஸ் அரசிடம் பேச்சுவார்த்தை அல்லது நீதிமன்றம் மூலமாக மேகதாவில் அணைக்கட்டும் நடவடிக்கையை ரத்து செய்யவும் மற்றும் காவிரி மேலாண்மை ஆணையம் வழங்க உத்தரவிட்ட நீரை பெற முயற்சிக்க இக்கூட்டத்தின் வாயிலாக கோட்டுக்கொள்கிறோம்.

**இரங்கல் தீர்மானம்**

அம்மாபேட்டை பேரூர் கழக முன்னாள் செயலாளர் ராஜப்பா மறைவிற்கும், அம்மாபேட்டை பேரூர் கழக முன்னாள் மாவட்ட பிரதிநிதி விமல் ராஜ் மறைவிற்கும், 20 வார்டு சிவானந்தம் மற்றும் தொண்டர் ஜெயராமன் மறைவிற்கும், எம்.ஆர்.எஸ். பாரத் தாயார் வசந்தா அம்மாள் மறைவிற்கும், சுவாமிமலை பேரூர் முன்னாள் ஒன்றிய பிரதிநிதி அன்பழகன் மறைவிற்கும், பாபநாசம் வடக்கு ஒன்றியம் கூனஞ்சேரி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கண்ணையன் தாயார் லட்சத்தம்மாள் மறைவிற்கும், திருபுவனம் மாவட்ட பிரதிநிதி கே காளிமுத்து மறைவிற்கும், ஆடுதுறை முந்திரி தோப்பு தாஸ் மகன் வேளாங்கண்ணி மறைவிற்கும், பாபநாசம் தெற்கு ஒன்றியம் ஒன்றிய பிரதிநிதி கே என் ரவிச்சந்திரன் மறைவிற்கும் ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் செம்மொழி அவர்களின் கணவர் வின்சென்ட் மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். பழனியப்பன்

**ஜூலை 24 (2014)**



திராவிட இயக்கத்தில் துவக்க கால உறுப்பினராக இருந்தவர்.

உடுமலைப்பேட்டை நகரத்தில் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

உடுமலைப்பேட்டை நகர்மன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இவர் கூட்டுறவு வங்கி – வீடுகட்டும் சங்கம் – ஆதிதிராவிடர் கூட்டுறவு நாணய சங்கம் போன்ற கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராகவும், இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**